P.R.NO. 811

Date:-11-12-2020

# செய்திக்குறிப்பு

## டிப்ளமோ மற்றும் பி.இ. படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கென்று சிறப்பு தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்

தஞ்சாவூர் மாவட்டத்தைச்சேர்ந்த டிப்ளமோ மற்றும் பி.இ. படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கென்று சிறப்பு தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் 15.12.2020 அன்று காலை 10.00 மணி முதல் தஞ்சாவூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய வளாகத்தில் நடைபெறவுள்ளது. இத்தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் சென்னை / காஞ்சிபுரம் மற்றும் கோவை உள்ளிட்ட தொழில் நகரங்களிலிருந்து பிரபலமான MNC நிறுவனங்கள் கலந்து கொண்டு நேர்காணல் முறையில் தங்கள் காலிப்பணியிடங்களை நிரப்ப உள்ளனர்.

இப்பணிக்காலியிடத்திற்கு மாதம் ரூ 10850 முதல் ரூ 15050-க்குள் ஊதியம் வழங்கப்படும். மேலும் உணவு, போக்குவரத்து வசதி மற்றும் இதர சலுகைகளும் அந்நிறுவனங்களால் வழங்கப்படும். மேலும் இந்நேர்காணலில் கலந்து கொள்வதனால் தங்களது வேலைவாய்ப்பு பதிவு மூப்பு பரிந்துரையில் எந்தவித பாதிப்பும் ஏற்படாது எனத் தெரிவிக்கப்படுகிறது. மேலும் தொடர்புக்கு : 04362-237037

எனவே தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த டிப்ளமோ மற்றும் பி.இ. படித்த இளைஞர்கள் இவ்வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் திரு.ம.கோவிந்தராவ்.இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

மாவட்ட ஆட்சியர்,
தஞ்சாவூர்.